பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 09 செவ்வாய்க்கிழமை 26.10.2021 கதிர் 218

## நிருபமாவும் ஆணைக்குழு விசாரணைக்கு அழைப்பு

முன்னாள் இராஜாங்க அமைச்சர் நிருபமா ராஜபக்ஷஇலஞ்சஒழிப்புஆணைக்குழுவுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

பண்டோரா ஆவண சர்ச்சையில் அவரும் அவரது கணவரான தொழிலதிபர் திருக்குமார் நடேசனும் சிக்கியுள்ளனர். ☞2





# சுமந்திரனுக்கு எதிராக குருநகரில் உள்ளூர் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்!

## செருப்பு மாலை அணிவிக்கப்பட்டு கொடும்பாவியும் எரிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனுக்கு எதிராக குருநகரில் இன்று மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ☞2



இலங்கை - இந்திய

## கடற்படைத் தளபதிகள் நேரில் சந்தித்துப் பேச்சு

இந்தியக் கடற்படையின் தென் பிராந்திய கட்டளைத் தளபதிக்கும், இலங்கையின் கடற்படைத் தளபதிக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. ☞2

## வடக்கில் பண முதலைகளால் எங்கள் கடல் வளம் அழிப்பு!

### குருநகர் போராட்டத்துக்கு எதிராக சுகிர்தன் கருத்து



(இ.கலையமுதன்)

வடக்கில் கடலையே நம்பி பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால், வடக்கில் பல பண முதலைகள் அந்தக் கடல் வளத்தையே அழிக்கப் பார்க்கின்றார்கள்.

- இவ்வாறு முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் குற்றஞ்சாட்டினார்.

இன்று குருநகரில் முன்னெடுக்கப்பட்ட மீனவர்களின் எதிர்ப்புப் போராட்டம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் ட்ரோலர் தொழில் செய்வோர் பலர் அரச உத்தியோகத்தர்களாகவும், ☞2

கொரோனாத் தொற்றுப் பரவலால்

## செட்டிகுளம் பிரதேச செயலக திட்டமிடல் கிளைக்குப் பூட்டு!

(வவுனியா நிருபர்)

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் கிளை கொரோனா அச்சுறுத்தல் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் ☞2

## நாடாளுமன்றில் ரஞ்சன் இல்லாதது பெரும் குறை

### அவரைப் பார்த்த பின் சஜித் கவலை

ரஞ்சன் ராமநாயக்க தற்போது நாடாளுமன்றத்தில் இல்லாதது பாரிய குறைபாடாகும். எந்த வொரு சந்தர்ப்பத்திலும் இலஞ்ச, ஊழல்களுக்கு எதிராகக் குரல்கொடுத்து வந்த ரஞ்சன் ராமநாயக்க விரைவில் விடுதலை செய்யப்பட வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன். ☞2





## அஸாத் ஸாலிக்கு விளக்கமறியல் நவ.9 வரை நீடிப்பு

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்ட, மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அஸாத் ஸாலியின் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. ☞2

## மைத்திரியுடன் மீண்டும் மேடையேறத் தயாரில்லை

### பீல்ட் மார்ஷல் பொன்சேகா காட்டம்



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடன் இணைந்து செயற்பட நாம் தயாரில்லை.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றஉறுப்பினரும்முன்னாள்இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

ஐக்கிய மக்கள் சக்திக்குள் கடும் மோதல் எதுவும் இல்லை என்ற போதிலும் அத்தகையதோர் நிலைமையைத் தோற்றுவிப்பதற்குச் சிலர் முற்படுகின்றனர்.

இன்று அரசுக்குள்தான் உச்சக்கட்ட மோதல் ☞2

## மேலும் 29 பேர் சிக்கினார்கள்

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 29 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ☞2

காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு



## மைத்திரியுடன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்பட்டுள்ளது. பங்காளிக் கட்சிகள் வெவ்வேறான வழிகளில் பயணிக்கின்றன. ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சிஉறுப்பினர்கள் எம்முடன் இணையலாம். அவர்களுடன் பயணிப்போம்.

ஆனால், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் எவ்வித கொடுக்கல் - வாங்கல்களும் கிடையாது. அவருடன்மீண்டும்மேடையேறுவதற்கு நான் தயாரில்லை - என்றார்.

## மேலும் 29 பேர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக, தனிமைப்படுத்தல் உத்தரவை மீறியமை தொடர்பில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 81 ஆயிரத்து 353 ஆக உயர்வடைந்துள்ளது.

அதேவேளை, குறித்த 24 மணி நேரத்தில் மேல்மாகாண எல்லையைக் கடக்க முற்பட்ட 542 வாகனங்கள் 1,088 பேருடன் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

அத்துடன், மேல் மாகாணத்தினுள் உள்நுழைய முற்பட்ட 684 வாகனங்கள் 1,156 பேருடன் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

## நாடாளுமன்றில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் தண்டனை அனுபவித்துவரும் ரஞ்சன் ராமநாயக்கவைநலம்விசாரிப்பதற்காக அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு இன்று எதிர்க்கட்சித் தலைவர் சென்றிருந்தார்.

வெளியே வந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக நிதி மோசடி, இலஞ்ச - ஊழல் குற்றச்சாட்டுகள், மக்களின் சொத்துக்களை சூறையாடிய குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டதில்லை. அவர் தன்னிடமுள்ள சொத்துகளைக் கூட பொதுமக்களுக்காக அர்ப்பணிப்பு செய்யக்கூடிய மனிதாபிமானமிக்கவர்.

மக்களின் நலனுக்காகச் செயலாற்றும் நற்பண்பு ரஞ்சன் ராமநாயக்கவுக்கு இருக்கின்றது. அவர் பிரச்சினைக்குரிய சூழ்நிலைகள் உருவான ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் சிறிதளவுகூட சிந்திக்காமல் மக்களுக்காக முன்வந்தவர் - என்றார்.

## அஸாத் ஸாலிக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடந்த மார்ச் 9 ஆம் திகதி நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு ஷரீஆ சட்டம் குறித்து சர்ச்சையான கருத்தொன்றை அவர் வெளியிட்டிருந்தார்.

அந்தக் கருத்து இன முரண்பாட்டை ஏற்படுத்துகின்றது எனத் தெரிவித்து மார்ச் 16 ஆம் திகதி குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர் கைதுசெய்யப்பட்டார்.

இந்நிலையில், அவருக்கான விளக்கமறியல் எதிர்வரும் 9ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை நீதிமன்றம் இன்று பிறப்பித்துள்ளது.

## நிருபமாவும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொழிலதிபர் திருக்குமார் நடேசனிடம் இரண்டு முறை விசாரணை நடத்தப்பட்டிருந்தது.

இந்தநிலையிலேயே நிருபமா ராஜபக்ஷவுக்கும் ஆணைக்குழு விசாரணைக்கான அழைப்பை விடுத்திருப்பதாக தெரியவருவதோடு விசாரணைத் திகதி குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

## சுமந்திரனுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்ளூர் இழுவை மடி மீன்பிடித் தொழில் முறை தடை செய்யப்பட வேண்டும் என்று சுமந்திரன் எம்.பி. அண்மையில் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குருநகர் பகுதியில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு ஹர்த்தால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் அங்கு குருநகர், வல்வெட்டித்துறை மீனவர்கள் ஒன்றிணைந்து எதிர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

அங்கு கூடியிருந்தவர்களால் சுமந்திரன் எம்.பிக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பப்பட்டமையுடன் பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

இறுதியாக சுமந்திரன் எம்.பியின் கொடும்பாவிக்கு செருப்பு மாலை அணிவிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கருத்துத் தெரிவிக்கும்போது, இது தமிழ்க் கட்சிகளுக்கு எதிராகவோ அல்லது அரசுக்கு எதிரான போராட்டமோ அல்ல. இது தமிழினத் துரோகி சுமந்திரனுக்கு எதிரான போராட்டம். பல பேருக்கு வாழ்வளிக்கும் இழுவை மடித் தொழிலை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக முழுமையாகத் தடை செய்ய வேண்டும் எனக் கோருவது நியாயமற்றது - என்றனர்.

## வடக்கில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வேறு தொழில் முயற்சியிலும் ஈடுபடுபவர்களே. தொடர்சியாக கடல் தொழிலில் ஈடுபடும் ஒரு சிலரே ட்ரோலர் வைத்துள்ளார்கள். அவர்கள் தங்கள் குடும்பத்தைப் போலவே கடலையும் நேசிப்பவர்கள். ஆனால், கடலைக் கொள்ளையடிக்க முதலீடு செய்தவர்கள் எந்த எல்லைக்கும் போவார்கள். அவர்களை கண்டு நாங்கள் பயப்படப்போவதும் இல்லை.

ஒரு சிலர் வாழ்வதற்காக எங்கள் மண் வளத்தையும் கடல் வளத்தையும் அழிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

உருவப்பொம்மைஎன்னஎங்களைச் சுட்டுப்போட்டாலும் எங்கள் வளங்களை அழிப்பவர்களுக்கு எதிராகப் போராடுவோம்.

குடத்தனையில் மணல் கொள்ளைக்கு எதிராகப் போராடிய நண்பன் கேதீஸை சுட்டுக் கொன்றதை நாம் மறக்கவும் இல்லை. அதற்குப் பயந்து மணல் கொள்ளையைத் தடுத்து நிறுத்தாமல் பயந்து ஒதுங்கவும் இல்லை. ஆகவே, எங்கள் போராட்டம் தொடரும் - என்றார்.

## செட்டிகுளம் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உதவித் திட்டமிடல் பணிப்பாளர் உள்ளிட்ட இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தொற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டதையடுத்து அவர்கள் மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையிலேயே அவர்களுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து அவர்கள் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளமையுடன், செட்டிகுளம் பிரதேச செயலகத்தின் திட்டமிடல் கிளை மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

## கடற்படை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரு தரப்புப் பயிற்சிகளின் நிமித்தம், இந்திய கடற்படையின் ஆறு கப்பல்கள் இலங்கைக்கு வந்துள்ளன.

இந்நிலையில், குறித்த பயிற்சிகளைப் பார்வையிடும் முகமாக அந்த நாட்டின் தென் பிராந்திய கட்டளைத் தளபதி அனில் குமார் சௌலா இலங்கைக்கு வந்துள்ளார்.

அவர் இலங்கையின் கடற்படைத் தளபதியை நேற்று சந்தித்தபோது இரண்டு நாட்டு கடற்படைகளின் ஒத்துழைப்பு குறித்து பேசப்பட்டதாக இலங்கையின் கடற்படை தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் தங்கியிருக்கும் காலத்தில் சௌலா, இலங்கையின் வெளியுறவுச் செயலாளர், வான்படைத் தளபதி ஆகியோரையும் சந்திக்கவுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் வியாழக்கிழமை இலங்கையில் இருந்து புறப்படும் முன்னர் திருகோணமலைக்கும் அவர் செல்லவுள்ளார் எனத் தெரியவருகின்றது.

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
தொலைபேசி – 021 222 3000 இணையம் – onlinekathir.com

## இந்த மண்ணில் நீதி கிட்டாது

2019 ஏப்ரல் 19ஆம் திகதி இடம்பெற்ற ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் முறையான விசாரணைகள், புலனாய்வுகள் நடைபெறவே இல்லை என்று குற்றம் சுமத்தும் கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், இந்த விடயத்தில் பல உண்மைகள் அதிகாரத் தரப்பினால் முழுமையாக மூடி மறைக்கப்படுகின்றன என்று விசனம் தெரிவிக்கிறார். அண்மையில் வெளிநாட்டில் வசிக்கும் இலங்கையருடன் 'சூம்' செயலி முறையில் நடந்த கலந்துரையாடலில் பங்குபற்றிய கர்தினால் மல்கம் ரஞ்சித், திடுக்கிடும் பல உண்மைகளை – பின்புல இரகசியங்களை – அந்த உரையில் கூறினார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தொடர் தாக்குதல் தொடர்பில் நீதி முறையான புலனாய்வுகள், விசாரணைகள் நடைபெறவில்லை, உண்மைகள் வேண்டுமென்றே மறைக்கப்படுகின்றன, பொறுப்புக்கூறல் நிலை நிறுத்தப்படவில்லை என்றெல்லாம் தனது ஆதங்கத்தை – வேதனையை – கொட்டித் தீர்க்கின்றார் கர்தினால் மல்கம் ரஞ்சித்.

உண்மைதான். தமது அப்பாவி மக்களுக்கு – மந்தைக்கு வேண்டுமென்றே அநியாயங்களையும் சாவுகளையும் – பேரழிவுகளையும் தந்த கொடூரம் குறித்து உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமல், நீதி தட்டிக் கழிக்கப்படுகின்றது. அந்த மந்தையின் மேய்ப்பனான கர்தினாலுக்கு சீற்றமும் விசனமும் ஏற்படுவது புரிந்து கொள்ளத்தக்கதே. அதுவும் திட்டமிட்டு நீதி மறைக்கப்படும் போது அந்த அதிருப்தி எத்தகையதாக மாறும் என்பதும் உணரத்தக்கதே.

இது விடயத்தில் உங்களுக்கு உசிதமானதைச் செய்யுங்கள், அதற்கு எனது ஆசீர்வாதமும், ஜெபமும், இறை இறைஞ்சலும் உண்டு எனப் பேராயர் மல்கம் ரஞ்சித்துக்கு முழு சுதந்திரம் அளித்திருக்கின்றார் அவரின் மேனிலை திருச்சபை வழிகாட்டியான பாப்பாண்டவர்.

தமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரும் விடயத்தில் மேலும் தெம்பையும் வலுவையும் தரும் செய்தியாக பாப்பாண்டவரின் ஆசீர்வாதமும் அவருக்கு கிட்டியிருக்கிறது எனலாம்.

இந்தத் தொடர் தாக்குதல் நடந்த காலத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆட்சியில் யாதுமாகி நின்றவர் அப்போது எஸ்.ஐ.எஸ். (அரச புலனாய்வு சேவை) இயக்குநராக இருந்த பிரதி பொலிஸ் மாஅதிபர் நிலாந்த ஜெயரட்ண. அவரே ஜனாதிபதி மைத்திரிபாலவை எந்நேரமும் நெருங்கக்கூடிய உயர் நிலை பாதுகாப்பு அதிகாரியாக இருந்தவர்.

இந்தத் தொடர் குண்டுத் தாக்குதல்கள் பற்றிய முழு விவரங்களும் நேரத்துடனேயே விலாவாரியாக அவருக்குத் தெரிந்திருந்தன, முன்னெச்சரிக்கை தகவல்கள் விவரமாகக் கொடுக்கப்பட்டிருந்தன என்று பேராயர் உண்மைகளைப் போட்டுடைக்கின்றார்.

2018 நவம்பர் 30 ஆம் திகதி வனாத்துவில்லில் இரண்டு பெரிய பொலிஸார் கொல்லப்பட்டு, அவர்களின் இயந்திரத் துப்பாக்கிகள் சூறையாடப்பட்டன. இதனைப் பின்னர் தொடர் குண்டுத் தாக்குதல்களை நடத்திய குழுவே முன்னெடுத்திருந்தது என்பதைத் தெளிவாகத் அறியப்பட்டிருந்தும், திட்டமிட்டு அந்தப் பொலிஸார் கொலையின் குற்றம் முன்னாள் புலிகள் மீது போடப்பட்டது. இப்படி விடயத்தைத் தவறாகத் திசை திருப்பியதில் நிலாந்த ஜெயரட்ணவுக்குத் தொடர்பு இருக்கின்றது என்கிறார் பேராயர்.

முழுவதும் முன்கூட்டியே தெரிந்திருந்தும் – அறிந்திருந்தும் – குற்றம் நடப்பதற்கு இடமளித்து பார்த்து இருந்தவர் நிலாந்த ஜெயரட்ண. அவரை விசாரணைக்கு உட்படுத்தி சட்ட நடவடிக்கை எடுப்பதை விடுத்து, அவரைக் காப்பாற்றும் விதத்தில் அரசு சாட்சியாக அவரை மாற்ற விழைகின்றார் சட்ட மா அதிபர் என்று கூறுகிறார் பேராயர்.

நிலாந்த ஜெயரட்ணவுக்கு எதிராக ஏன் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்பதற்கு 15 காரணங்களை தெளிவாகக் குறிப்பிட்டு, சட்ட மா அதிபருக்கு கடிதம் அனுப்பி இருக்கிறார் பேராயர் மல்கம் ரஞ்சித்.

இப்போதைய எஸ்.ஐ.எஸ். இயக்குநரும். முன்னாள் இராணுவப் புலனாய்வுத் தலைவருமான சுரேஷ் சாலேக்கு எதிராகவும் இவ்விடயத்தில் பல குற்றச்சாட்டுகளை பேராயர் தரப்பு விவரமாக முன்வைத்துள்ளது.

ஆனால் இவற்றையெல்லாம் தாண்டி, உண்மைகளின் மூடிமறைப்பு துல்லியமாகத் தொடர்கின்றது. இந்தத் தொடர் தாக்குதலின் அரசியல் விளைவை தமக்குச் சாதகமாக்கக் காத்திருந்தோர், உண்மைக் குற்றவாளிகளைக் கழுவேற்ற அனுமதிக்கவே மாட்டார்கள் என்பதுதான் இங்குள்ள துன்பியல் துரதிஷ்டமாகும்.

# அந்நியசெலாவணி இருப்பு மறைப் பெறுமானத்தில்!

## நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தனாயக்க சுட்டிக்காட்டு



இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அந்நிய செலாவணி இருப்பு மறைப் பெறுமானத்துக்குச் சென்றுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தனாயக்க தெரிவித்துள்ளார்.

மாலைதீவை விடவும் கீழ் மட்டத்துக்கு இலங்கை சென்றுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசிய அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்–

உண்மையில் தற்போது அரசாங்கமும் இல்லை. ஜனாதிபதியும் இல்லை. வர்த்தக மாபியாக்களே நாட்டை நிர்வகித்துக் கொண்டிருக்கின்றனர். அதற்கு சிறந்த உதாரணம் திரும்பிச் சென்ற சீன உரக் கப்பல் மீண்டும் நாட்டுக்குள் வருகை தந்துள்ளமையாகும்.

குறித்த இரசாயன உர தயாரிப்பு சீன நிறுவனத்துடன் தொடர்புடைய அரசியல்வாதிகளும், நிறுவனங்களும் அந்தளவிற்கு சக்தி வாய்ந்தவர்களாகக் காணப்படுகின்றனர்.

இதனிடையே, இந்தியாவுடன் மிகவும் அவசரமாக ஒப்பந்தங்களைச் செய்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள திரவ நைட்ரஜன் உரத்தின் தரம் தொடர்பிலும் தற்போது விவசாயத்துறை நிபுணர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படும் போது உரிய பரிசோதனைகளை முன்னெடுத்து நாட்டுக்கு உண்மையை வெளிப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகும். மேலும், அரிசி, பருப்பின் விலையை பார்த்துக் கொள்வதற்காகவா நான் இருக்கின்றேன் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அவ்வாறெனில் மக்களின் பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்துவதற்காக இல்லையெனில் எதற்காக அவர் இருக்கிறார்? எனவும் அவர் இதன் போது கேள்வியெழுப்பியுள்ளார்.

# எனது கொடும்பாவிகளை எரித்தாலும் அஞ்சேன்!

## அமைச்சர் மஹிந்தானந்த திட்டவட்டம்



'எனது கொடும்பாவிகளை எரித்தாலும் அஞ்சமாட்டேன். ஒருபோதும் பின்வாங்கப் போவதும் இல்லை.' – இவ்வாறு விவசாயத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடெங்கும் விவசாயிகளால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு–

நாட்டின் எதிர்காலம், மக்களின் நலன் கருதியே இரசாயன உரப் பயன்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்டது.

பசுமை விவசாயத்துக்கான அடித்தளம் தற்போது இடப்பட்டுள்ளது. இந்நிலையில், மீண்டும் இரசாயன உரம் கோருவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல.

நாம் எமது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளமாட்டோம். எனது கொடும்பாவிகளை எரிக்கட்டும். இதற்கெல்லாம் அஞ்சி பின்வாங்கத் தயாரில்லை. – என்றார்.

# நுவரெலியாவிற்கு வரவேண்டாம் பொது மக்களிடம் கோரிக்கை

நுவரெலியாவிற்கு வருகை தரும் பொது மக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக அங்கு அடை மழை பெய்து வருகின்றது. இதனால் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் கடும் மழையால், வீதிகளிலும் பாரிய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும் மண்சரிவு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், நுவரெலியாவிற்கு வருகை தரும் பொதுமக்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். முடிந்தால் இந்த நாள்களில் நுவரெலியாவிற்கு விஜயம் செய்வதை தவிர்க்குமாறும் அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

# இலங்கை வானொலியில் சாயி பஜனை ஒலிபரப்பு

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக, சாயி சமித்திகளில் பக்தர்களை அழைத்து, சாயி பஜனை செய்து கொள்ளமுடியாத நிலையுள்ளது.

அரசு சுகாதாரக் கட்டுப்பாட்டுக்கு அமைவாக, பக்தர்களும் கலந்துகொள்ள முடிவதில்லை. இதனால் சாயிசேவையாக, கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம்,மகான் சீரடி சாயி மந்தீர் சமஸ்தானம் ஆதரவில், இலங்கை வானொலி ஒலிபரப்புக் கூட்டுதாபனத்தின், தமிழ் தேசிய சேவையில், எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை, 102.1 மற்றும் 102.3 அலைவரிசைகளில், தினமும் மாலை 6.15 மணி தொடக்கம் 6.30 வரை சாயி பஜன் நிகழ்ச்சி ஒலிபரப்பு செய்வதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் பிரசித்தி பெற்ற, கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலைய சாயி பஜன் குழுவினரின் ஏற்பாட்டில் நடைபெறும்.

# சூடான் பிரதமர் உள்பட பலரை சிறைப்பிடித்தது இராணுவம்

சூடானில் உள்ள இராணுவப் படைகள் பிரதமர் அப்தல்லா ஹம்தோக்கை, வீட்டுக் காவலில் வைத்துள்ளன என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அல் ஹதாத் தொலைக்காட்சி செய்தியின் படி, நேற்று (திங்கட்கிழமை) காலை நாட்டின் சிவில் தலைமையின் பல உறுப்பினர்கள் தடுத்து வைக் கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டில் தொலைத்தொடர்பு அணுகல் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனால் இங்குள்ள வர்களுடன் தொடர்புகொள்வது மிகவும் கடினமாக உள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கார்டூம் நகரத்திற்கு செல்லும் அனைத்து வீதி களையும்பாலங்களையும்இராணுவம்தடுத்துள்ளது. இங்குதான் அரச நிறுவனங்கள் உள்ளன. அங்குதான் ஜனாதிபதி மாளிகை மற்றும் பிரதமர் அலுவலகங்கள் உள்ளன.

சூடான் அரச தொலைக்காட்சி தேசபக்தி பாடல்களை ஒளிபரப்பியதுடன், இராணுவத்திடம் இருந்து உடனடி கருத்து எதுவும் இல்லை.

இதற்கிடையில், நாட்டின் முக்கிய ஜனநாயக சார்பு அரசியல் குழுவான சூடான் தொழில்முறை சங்கம், இராணுவத்தின் நகர்வுகளை வெளிப்படையான



இராணுவ சதி என்று அழைத்தது மற்றும் பொதுமக் களை வீதிகளில் இறங்க போராட அழைப்பு விடுத்தது.

அடையாளம் தெரியாத ஆதாரங்களை மேற்கோள் காட்டி, சவுதிக்கு சொந்தமான ஒளிபரப்பு நிறுவனம், நேற்று அதிகாலை பிரதமரை வீட்டுக் காவலில் வைப்பதற்கு முன்பு அவரது வீட்டை இராணுவம் முற்றுகையிட்டதாகக் கூறியுள்ளது.

கைத்தொழில் அமைச்சர் இப்ராஹிம் அல்–ஷேக் மற்றும் சூடானின் தலைநகர் கார்ட்டூமின் ஆளுநர் அய்மன் காலித் ஆகியோர் கைது செய்யப்பட்ட மற்ற சிவிலியன் அதிகாரிகளில் அடங்குகின்றனர் என குடும்ப வட்டாரங்கள் தெரிவித்தன.

தகவல் அமைச்சர் ஹம்ஸா பலூல், பிரதமரின் ஊடக ஆலோசகர் பைசல் முகமது சாலே மற்றும் சூடானின் ஆளும் இறையாண்மை சபையின் செய்தித் தொடர்பாளர் முகமது அல்–ஃபிகி சுலிமானும் கைது செய்யப்பட்டனர் என அசோசியேட்டட் பிரஸ் செய்தி நிறுவனத்திடம் பேசிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சூடானின் பொதுமக்கள் மற்றும் இராணுவத் தலை வர்களுக்கு இடையே பல வாரங்களாக அதிகரித்து வரும் பதற்றங்களுக்குப் பிறகு இந்த கைதுகள் இடம்பெற்றுள்ளன.

சூடானின் நீண்டகாலத் தலைவரான உமர் அல்–பஷீரின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து அதி காரத்தைப் பகிர்ந்து கொள்வதற்காக இராணுவம் மற் றும் சிவிலியன் குழுக்களுக்கு இடையே கசப்பான குற்றச்சாட்டுகள் கட்டவிழ்த்துவிட்டு வந்த நிலையில், இந்த சம்பவம் அரங்கேறியுள்ளது. கடந்த 2019ஆம் ஆண்டுபலமாதங்களாகநடந்தவீதிப்போராட்டங்களுக்குப் பிறகு அல்–பஷீர் தூக்கியெறியப்பட்டார். மேலும் 2023ஆம் ஆண்டின் இறுதியில் தேர்தலுக்கு வழிவகுக்கும் வகையில் அவரை அகற்றிய பின்னர் அரசியல் மாற்றம் ஒப்புக்கொள்ளப்பட்டது.

# அப்துல்லாவை கொல்ல விஷ மோதிரம் சவுதி இளவரசர் மீது குற்றச்சாட்டு!



மறைந்த மன்னர் அப்துல்லாவைக் கொல்ல சவுதி அரேபியாவின் பட்டத்து இளவரசர் விஷ மோதிரத்தை பயன்படுத்த பரிந்துரைத்தார் என அந்நாட்டின் முன்னாள் உளவுத்துறை அதிகாரி சாத் அல் ஜாப்ரி கூறியுள்ளார்.

தற்போது கனடாவில் வசித்து வரும் சாத் அல் ஜாப்ரி, சி.பி.எஸ். தொலைக்காட்சிக்கு அளித்த 60 நிமிட நேர் காணலில் இதுகுறித்து பல அதிர்ச்சி தரும் விடயங்களை பகிர்ந்து கொண்டுள்ளார்.

இதன்போது அவர் கூறுகையில், ‘தனது தந்தையை மன்னராக்குவதற்காக அவ்வாறு செய்ய விரும்பினேன் என பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான் தனது உறவினரிடம் கூறினார். அடுத்த வாரிசு யார் என்பது தொடர்பாக அப்போது ஆளும் குடும்பத்திற்குள் பதற்றம் ஏற்பட்டிருந்தது.

பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான், ஒரு மன நோயாளி, கொலைகாரர், மத்திய கிழக்கின் எல்லை யற்ற செல்வங்களைக் கொண்டு, தனது மக்களுக்கும், அமெரிக்காவுக்கும், இந்த ஒட்டுமொத்த பூமிக்கும் அச்சுறுத்தலாக இருப்பவர்.

2014ஆம் ஆண்டு நடந்த சந்திப்பின்போது அப்போது உள்துறை அமைச்சராக இருந்த இளவரசர் முகமது பின் நயேபிடம் மன்னர் அப்துல்லாவைக் கொல்ல ஏற்பாடு செய்ய முடியும் என்று சல்மான் கூறினார்.

அத்துடன், நான் மன்னர் அப்துல்லாவை படுகொலை செய்ய விரும்புகிறேன். எனக்கு ரஷ்யாவிலிருந்து ஒரு விஷ மோதிரம் கிடைத்திருக்கிறது. அவருடன் கைகுலுக்கி னால் போதும், அவர் முடிந்து விடுவார்.

பட்டத்து இளவரசர் முகமது பின் சல்மான், தற்பெருமை பேசியிருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் சொன்னார். நாங்கள் அதை கவனமாக எடுத்துக் கொண்டோம்.

இந்த விவகாரம் அரச நீதிமன்றத்தில் தனிப்பட்ட முறையில் தீர்க்கப்பட்டது. இந்த சந்திப்பு ரகசியமாக படமாக்கப்பட் டது. அந்தக் காணொலி பதிவின் இரண்டு பிரதிகள் எங்குள்ளன என்பது எனக்கு தெரியும். துருக்கியில் சௌதி அரேபிய ஊடகவியலாளர் ஜமால் கஷோகியை சவுதி உளவாளிகள் கொலை செய்த சில நாள்களுக்குப் பிறகு, தன்னைக் கொல்லவும் ஒரு குழுவை அனுப்பியது.

கனடாவின் ஒட்டாவா நகரில் உள்ள ஒரு விமான நிலையத்தில் ஆறு பேர் கொண்ட குழு தரையிறங்கியது, ஆனால், டி.என்.ஏ. பகுப்பாய்வுக்காக சந்தேகத்திற்கிட மான உபகரணங்களை எடுத்துச் சென்றமையை சுங்கத் துறையினர் கண்டறிந்ததை அடுத்து அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்’ என கூறினார்.

ஆனால், இந்த குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ள சவுதி அரேபிய அரசாங்கம், ஜாப்ரியை புனை கதைகளைக் கூறும் நம்பகமில்லாத அதிகாரி என கூறியுள்ளது.

இதனிடையே, சி.பி.எஸ். நிறுவனத்துக்கு வொஷிங்டனில் உள்ள சவுதி அரேபிய தூதரகம் அறிக்கை ஒன்றை அனுப்பியுள் ளது. அதில் ‘ஆடம்பரமாக வாழ்வதற்காக தாம் செய்த பில்லியன் கணக்கான டொலர்கள் நிதி குற்றங்களில் இருந்து திசை திருப்புவதற்காக புனைக் கதை களைக் கூறும் வழக்கம் கொண்டவர்’ என்று குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் மன்னர் அப்துல்லா 2015ஆம் ஆண்டு 90 வயதில் இறந்தார், அவருக்குப் பிறகு அவரது சகோதரரும் முகமது பின் சல்மானின் தந்தையுமான சல்மான் மன்னரானார். அவர் முகமது பின் நயேப்பை பட்டத்து இளவரசராக அறிவித்தார். 2017ஆம் ஆண்டில் நயேஃபுக்கு பதிலாக முகமது பின் சல்மான பட்டத்து இளவரசரானார். நயேஃபின் உள்துறை அமைச்சர் பதவியும் பறிக்கப்பட்டது. கடந்த ஆண்டில் அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார் எனவும் கூறப்படுகிறது. முகமது பின் நயேஃப் பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் ஜாப்ரி கனடாவுக்கு தப்பிச் சென்றார்.

## நாட்டை கட்டமைக்க தலிபான்களுக்கு உதவ சீனா உறுதி

ஆப்கானிஸ்தானில் பொருளாதாரம் மோசமடைந்து வரும் நிலையில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப தலிபான்களுக்கு உதவுவதாக சீனா உறுதியளித்துள்ளது. கட்டாரில் இன்று ஆப்கானிஸ்தானிய இடைக்கால தலிபான் அரசாங்கத்தின் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடிய போதே சீன வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். ஆப்கானிஸ்தானின் புதிய தலைவர்களுக்கு எதிரான பொருளாதாரத் தடைகளை நீக்குமாறு அமெரிக்காவிடம் சீனா வலியுறுத்தியுள்ளது. நாட்டில் ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்கு தொடர்ந்தும் ஆதரவை வழங்குவோம் என்றும் சீனா உறுதியளித்துள்ளது.

இதேவேளை அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைத்து பெண்கள் மற்றும் சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும் என்றும் சீன வெளிவிவகார அமைச்சர் வலியுறுத்தினார்.

மேலும் கிழக்கு துர்கெஸ்தான் இஸ்லாமிய இயக்கம் மற்றும் சீனாவின் தேசிய பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் பிற பயங்கரவாத அமைப்புகளை ஒடுக்குவதற்கு தலிபான் அரசாங்கம் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்கும் என நம்புகிறேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.


Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

# ஏ.வை. 4.2 என்ற புதிய வகை உருமாறிய கொரோனா பரவுகிறதா என்பது பற்றி ஆய்வு நடப்பதாக அரசு தகவல்



இந்தியாவில் ஏ.வை. 4.2 என்ற புதிய வகை உருமாறிய கொரோனா தீவிரமாகப் பரவுகிறதா, என ஆய்வு செய்யப்படுவதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

மத்தியப் பிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவில் ஏ.வை. 4.2 என்ற புதிய வகை உருமாறிய கொரோனா பற்றி இந்திய மருத்துவ ஆராய்ச்சி அமைப்பும் இன்னும் சில ஆய்வு நிறுவனங்களும் தங்களது ஆய்வுகளை மேற்கொள்கின்றன எனவும், குழந்தைகளுக்கான ஸைக்கோவ்-டி கொரோனா தடுப்பூசியின் விலை பற்றிய தீர்மானங்கள் பரிசீலனையில் உள்ளன எனவும் இந்திய மத்திய சுகாதார அமைச்சர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.



# பயங்கரவாதத்தை மத்திய அரசு எள்ளளவும் சகிக்காது

## உள்துறை அமைச்சர் அமித்ஷா தெரிவிப்பு

மத்திய அரசு பயங்கரவாதத்தை எள்ளளவும் சகித்துக் கொள்ளாது எனக் கூறியுள்ள இந்திய மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷ ஷா, ஜம்மு காஷ்மீரில் முழுமையான அமைதி திரும்பும் வரை திருப்தி கொள்ளக்கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் தனது மூன்று நாள் சுற்றுப்பயணத்தை மேலும் நீடித்துள்ள அமித் ஷா, இரவுப் பொழுதை புல்வாமாவில் உள்ள படைவீரர்கள் முகாமில் கழித்தார். அங்கு பாதுகாப்பு படையினரிடையே பேசிய அமித் ஷா, அவர்களுடன் ஒரு நாளை கழித்து அவர்களது பிரச்சினைகளை புரிந்துகொள்ள விரும்புகிறேன் என கூறினார். ஜம்மு காஷ்மீரில் சட்டம் ஒழுங்கு நிலைமை சீரடைந்து வருவதாகக் கூறிய அவர், நமது வாழ்நாளில் அமைதியான ஜம்மு காஷ்மீரைச் சாத்தியப்படுத்த முடியும் என நம்பிக்கை தெரிவித்தார்.

அரசியலமைப்பின் சட்டப்பிரிவு 370 நீக்கப்பட்ட பின்னர், காஷ்மீரில் இரத்தம் சிந்தப்படுவதை தடுத்த பாதுகாப்பு படையினருக்கு நன்றி தெரிவிக்கிறோம் எனவும் அமித்ஷா குறிப்பிட்டார்.

# முல்லைப் பெரியாறு பற்றி பீதியைப் பரப்பினால் நடவடிக்கை கேரள முதல்வர் பினராயி விஜயன் பகிரங்க எச்சரிக்கை



முல்லைப் பெரியாறு அணையால் கேரளாவுக்கு எந்த அபாயமும் இல்லை என்றும், வீணாக பீதியைப் பரப்புவோர் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கேரளா முதலமைச்சர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

தொடர் மழை காரணமாக கேரளாவில் உள்ள முல்லைப் பெரியாறு அணை 136 அடியைத் தாண்டியுள்ளது. தமிழக அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இந்த அணையிலிருந்து, வைகை அணைக்கு நீர்திறக்க வேண்டும் என கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன், தமிழ்நாடு முதலமைச்சருக்கு கடிதம் எழுதியிருந்தார். இந்தநிலையில் கேரள சட்டப்பேரவையில் பேசிய பினராயி விஜயன், முல்லைப் பெரியாறு குறித்து தற்போது சமூகவலைத்தளங்களில் பரப்பப்பட்டு வரும் தகவல்கள் மிகவும் தவறானவை என்றும், பீதி ஏற்படுத்தும் நோக்கில் செயல்படுவோர் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மலையாள நடிகரான பிருத்வி ராஜ் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில், Decommission Mulla periyar Dam என்ற ஹாஷ்டக்குடன், “உண்மைகளும் கண்டறிதல்களும் என்னவாக இருந்தாலும், 125 ஆண்டுகள் பழைமையான இந்த அணை இன்னும் செயல்படுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. அரசியலையும் பொருளாதாரத்தையும் ஒதுக்கிவிட்டு சரியானதைச் செய்யவேண்டிய நேரம் இது. நாம் அரசு அமைப்புகளை மட்டுமே நம்ப முடியும். அரசு அமைப்புகள் இதில் ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என பிரார்த்தனை செய்வோம் என்று தெரிவித்து பரபரப்பைக் கிளப்பியிருந்தார்.

அதன்பின்னர் மேலும் சில மலையாளத் திரையுலக பிரபலங்களும் இந்த விடயம் குறித்து தமது கருத்துக்களை வெளியிட்டுவருகின்றனர்.

# பாகிஸ்தானின் வெற்றியை கொண்டாடுபவர் சிறையில்

## பா.ஜ.க. எச்சரிக்கை விடுப்பு



ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் இந்தியாவை 10 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி பாகிஸ்தான் அபார வெற்றிபெற்றது.

இந்தியாவை பாகிஸ்தான் வீழ்த்தியதை காஷ்மீரில் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மாணவ, மாணவிகள் கொண்டாடியதையடுத்து அங்கு மோதல் வெடித்ததாக செய்திகள் தெரிவிக்கின்றன. அது தொடர்பான வீடியோக்கள் சமூகவலைத்தளத்தில் தற்போது வைரலாகி வருகின்றன. இந்தச் சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்துள்ள பாதுகாப்புப் படையினர் இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்தி வருகின்னறனர்.

இந்தச் சம்பவம் குறித்து மக்கள் ஜனநாயக கட்சித் தலைவர் மெகபூபா முப்தி, ‘பாகிஸ்தானின் வெற்றியைக் கொண்டாடிய காஷ்மீரிகள் மீது ஏன் இவ்வளவு கோபம்? சிலர் கொலைவெறிக் கோஷங்களையும் எழுப்புகிறார்கள். துரோகிகளைச்சுடவேண்டும் என்று கூறுகிறார்கள். காஷ்மீர் துண்டாக்கப்பட்டு, சிறப்பு அந்தஸ்துப் பறிக்கப்பட்டபோது எத்தனை பேர் இனிப்புகள் வழங்கிக் கொண்டாடினார்கள் என்பதை யாரும் மறந்துவிடவில்லை’ என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், மெகபூபா முப்தியின் கருத்துக்கு ஜம்மு-காஷ்மீர் பா.ஜ.க. தலைவர் ரவீந்தர் ரானா கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ரானா கூறுகையில், மெகபூபா முப்தி தலிபானிய எண்ணங்களுடன் உள்ளார். ரி-20 உலகக்கிண்ணப் போட்டியில் இந்தியாவுக்கு எதிரான பாகிஸ்தானின் வெற்றியைக் கொண்டாடுபவர்கள் நாட்டுக்கு எதிராகச் சதி செய்தனர் எனசிறையில்தள்ளப்படுவார்கள் என்று எச்சரித்திருக்கிறார்.




# ஜெயா மரண விசாரணை ஆணையத்தில் ஆஜராக முடியாது பேருக்கு களங்கம் விளைவிப்பதாக அப்போலோ குற்றச்சாட்டு

முன்னாள் தமிழக முதலமைச்சரான ஜெயலலிதாவின் மரணம் குறித்து ஆராயும் நீதியரசர் ஆறுமுகசாமி ஆணையத்தின் விசாரணைக்கு இனி ஆஜராக முடியாது என அப்போலோ மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஆறுமுகசாமி ஆணையத்தில் ஆஜராக விலக்குக் கோரிய அப்போலோவின் மனு விசாரணை உச்சநீதிமன்றத்தில் தொடங்கியது. ஆறுமுகசாமி ஆணையத்திற்கு எதிராக மூன்று விடயங்களை அப்போலோ நிர்வாகம் உச்ச நீதிமன்றத்தில் முன்வைத்துள்ளது. அதாவது ஒருதலைப்பட்சமாக ஆறுமுகசாமி ஆணையம் நடந்துகொள்கிறது. இந்த விவகாரத்தில் அரசியல் தலைவர்கள் ஏராளமானோர் இன்னும் விசாரிக்கப்படாமல் இருக்கும் நிலையில் எங்களது மருத்துவர்களையே மீண்டும் மீண்டும் விசாரணைக்கு அழைக்கின்றனர்.

ஆணையத்தில் நாங்கள் கொடுக்கும் தகவல்களையெல்லாம் வேண்டுமென்றே ஆறுமுகசாமி ஆணையம் கசியவிடுகிறது. இதனால், எங்கள் நற்பெயர் கெட்டுப்போகிறது. எனவே, இதைத் தடுக்கும் நோக்கில் நீதிமன்றத்தை நாடக்கூடிய உரிமை எங்களுக்கு இருக்கிறது. அந்த உரிமையின் அடிப்படையில்தான் ஆணையம் முன்பு ஆஜராக முடியாது எனத் தெரிவிக்கிறோம்.

அதிகார வரம்பை மீறி ஆறுமுகசாமி ஆணையம் நடந்துகொள்கிறது. நிறைய உத்தரவுகளைப் போடுகிறார்கள். இது உண்மையைக் கண்டறிய நடக்கும் ஆணையமாகத் தெரியவில்லை. நாங்கள் ஆணையத்தை கலைக்கக் கோரவில்லை. ஆனால் ஆணையத்தில் மருத்துவ வல்லுநர்கள் யாரும் இடம்பெறவில்லை. அப்படி இருக்க மருத்துவ ரீதியிலான விவரங்களை நாங்கள் எந்த அடிப்படையில் தெரிவிப்பது நீதிமன்றத்தில் என்ன விடயங்கள் வேண்டுமானாலும் சமர்ப்பிக்கிறோம். ஆணையத்தின் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஜெயலலிதா சிகிச்சை பெற்றபோது அப்போதைய அரசு கூறியதாலேயே சி.சி.டி.வி. கமராக்கள் அகற்றப்பட்டன. ஜெயலலிதாவுக்கு தனது அந்தரங்க செயற்பாடுகளை வெளிப்படுத்துவது ஏற்புடையதாக அல்ல என அப்போலோ நிர்வாகம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

# நேற்று மட்டக்களப்பில் ஆசிரியர்கள் போராட்டம்




சம்பள முரண்பாட்டினை நீக்குதல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று மட்டக்களப்பில் ஆசிரியர்கள் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கம்,இலங்கை ஆசிரியர் சேவை சங்கம்,ஆசிரியர் அதிபர்களின் தொழிற்சங்கம் உட்பட பல்வேறு தொழிற்சங்கங்கள் இணைந்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு காந்திபூங்காவில் ஒன்றுகூடிய ஆசிரியர்கள்,அதிபர்கள் ஊர்வலமாகச் சென்று மட்டக்களப்பு மணிக்கூண்டு கோபுரத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிபர் ஆசிரியர்களின் 24 வருட சம்பள முரண்பாட்டினை நீக்கு,பிள்ளைகளின் கல்வி உரிமையினை உறுதிப்படுத்து, கொத்தலாவல பாதுகாப்பு சட்டமூலத்தினை கிழித்தெறி, அதிபர், ஆசிரியர் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் அழுத்தத்தினைக் கொடுக்காதே உட்பட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளை போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

இந்தபோராட்டத்தில் ஆசிரியர்கள்,அதிபர்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டமையுடன் பல்வேறு கோஷங்களையும் எழுப்பினர்.

# மட்டக்களப்பு மற்றும் அம்பாறைக்கு டக்ளஸ் தேவானந்தா 3 நாள் விஜயம்



மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களுக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளார்.

குறித்த மாவட்டங்களில் கடற்றொழில் சார் செயற்பாடுகளில் ஈடுபடுவோர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சாத்தியமான அபிவிருத்தி செயற்பாடுகள் தொடர்பாக ஆராயும் வகையில் இந்த விஜயம் அமையவுள்ளது.

அதனடிப்படையில் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் கள விஜயத்தினை மேற்கொள்ளவுள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாளை மறுதினம் அம் பாறை மாவட்டத் தில் கள விஜயங் களை மேற்கொள்ள இருப்பதுடன், கடற் றொழில்சார் அமைப்புக்கள் மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடலிலும் ஈடுபடவுள்ளார். அதனைத் தொடர்ந்து எதிர் வரும் வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தில் கடற்றொழில் சார் அமைப்புக்களையும் அதிகாரிகளையும் சந்திக்கவுள்ளார்.

இவ்விரு மாவட்டங்களிலும் கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை போன்றவற்றில் மேற்கொள்ளக் கூடிய அபிவிருத்திகள் தொடர்பாகவும் மூன்று நாள் விஜயத்தின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கவனம் செலுத்தவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வவுணதீவு வயலினுள் ஆர்.பி.ஜி. லோஞ்சர் மீட்பு

மட்டக்களப்பு, வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள நெடுஞ்சேனை வயல் பிரதேசத்தில் கைவிடப்பட்டிருந்த ஆர்.பி.ஜி. லோஞ்சர் ஒன்று நேற்று மாலை மீட்கப்பட்டுள்ளதாக,வவுணதீவு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசாந்த அப்புகாமி தெரிவித்தார்.

குறித்த வயலில் உழவு இயந்திரம் மூலம் உழவு நடவடிக்கையில் வயல் உரிமையாளர் ஈடுபட்ட நிலையில், நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்து ஆர்.பி.ஜி. லோஞ்சா ஒன்று நிலத்தில் இருந்து வெளியே வந்துள்ளது.

இது தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து, குறித்த ஆர்.பி.ஜி. லோஞ்சர் மீட்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதி கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியாக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குடிசையில் வாழ்ந்த குடும்பத்திற்கு சுவிஸ் உதயத்தால் நிரந்தர வீடு

மட்டக்களப்பு, ஒக்.26

மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மிகவும் வறிய நிலையில் எந்த அடிப்படைவசதியும் அற்ற நிலையில் குடிசையில் வாழ்ந்த குடும்பம் ஒன்றுக்கு வீடு ஒன்றினை கட்டிவழங்குவதற்கான ஏற்பாட்டினை சுவிஸ் உதயம் அமைப்பு முன்னெடுத்துள்ளது.

செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரடியன்குளம் பகுதியில் களிமண் வீட்டில் யானைகளின் அட்டகாசத்திற்கு மத்தியில் சிறுகுழந்தைகளுடன் வாழும் குடும்பத்திற்கே இந்த வீட்டினை கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் உதயம் அமைப்பின் பிரதிநிதிகள் இப்பகுதியில் கள விஜயத்தினை மேற்கொண்டபோது குறித்த குடும்பத்தின்நிலைமைதொடர்பானதகவல்கள்பெறப்பட்டு அவை சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச்சங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சுவிஸ் உதயம் அமைப்பின் பொருளாளர் துரைநாயகத்தின் முயற்சியினால் சுமார் ஆறு லட்சம் ரூபா செலவில் குறித்த வீட்டினை அமைத்துக்கொடுப்பதற்கான பணிகள் நேற்று (திங்கட்கிழமை) ஆரம்பித்துவைக்கப்பட்டன.

சுவிஸ் உதயம் அமைப்பின் கிழக்கு மாகாண கிளையின் மட்டக்களப்பு இணைப்பாளர் றொமிலா செங்கமலன் தலைமையில் இந்த வீட்டினை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது.

மூன்று குழந்தைகளுடன் கூலித்தொழில் செய்து வரும் குடும்பத்தினர் நீண்டகாலமாக களிமண் வீட்டில் வசித்துவந்த நிலையில் சுவிஸ் உதயம் அமைப்பின் ஊடாக அவர்களுக்கான வீடு அமைத்துக்கொடுக்க நடவடிக்கையெடுக்கப்பட்டதற்கு அப்பிரதேச மக்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.



# ஸ்கொட்லாந்தைச் சுருட்டியெடுத்தது ஆப்கானிஸ்தான் 130 ஓட்டங்களால் பெரும் வெற்றியைப் பதிவு செய்தது




ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் நேற்றைய போட்டியில், ஸ்கொட்லாந்து அணியை ஆப்கானிஸ்தான் அணி 130 ஓட்டங்களால் அபாரமான முறையில் வெற்றிபெற்றுள்ளது.

சார்ஜாவில் நடைபெற்ற சூப்பர் -12 சுற்றின் குழு-2 இற்கான இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 190 ஓட்டங்களைக் குவித்தது. நஜிபுல்லா 59 ஓட்டங்களையும் குர்பாஸ் 46 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். ஸ்கொட்லாந்து அணியின் பந்துவீச்சில், சப்யான் செரீப் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனைத்தொடர்ந்து 191 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய ஸ்கொட்லாந்து அணி, 10.2 ஓவர்களிலேயே 60 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களால் பரிதாபகரமாகத் தோற்றுப்போனது. ஜோர்ஜ் முன்சே 25 ஓட்டங்களையும் கிறிஸ் க்ரேவ்ஸ் 12 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆப்கானிஸ்தான் அணியின் முஜிப்புர் ரஹ்மான் 5 விக்கெட்டுக்களையும் ரஷிட்கான் 4 விக்கெட்டுக்களையும் நவீன் உல் ஹக் ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக 5 விக்கெட்டுக்களை வீழ்த்திய முஜிப்புர் ரஹ்மான் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் குழு 2 இல் ஆப்கானிஸ்தான் அணி 2 புள்ளிகளோடும் 6.5 என்ற நிகர ஓட்ட சராசரியோடும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

## ஆஷ் தொடருக்கான இங்கிலாந்து அணியில் ஓய்வை முடித்து பென் ஸ்டோக்ஸ் இணைந்தார்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான 5 டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷ் தொடர் டிசெம்பர் 8 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்திய அணி கடந்த ஜூலை மாதம் இங்கிலாந்து சென்று 5 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது. அந்தச் சமயத்தில், இங்கிலாந்து அணியின் நட்சத்திர வீரர் பென் ஸ்டோக்ஸ் அனைத்து வகையான கிரிக்கெட்டில் இருந்தும் தற்காலிக ஓய்வினை எடுக்கிறோம் என அறிவித்தார். விரல் காயத்தில் இருந்து மீளவும் மனரீதியாக புத்துணர்ச்சி பெறவும் அவர் முடிவை எடுக்கிறோம் எனத் தெரிவித்திருந்தார்.

இதனால், இந்தியாவுடனான டெஸ்ட் தொடர், ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற ஐ.பி.எல். தொடர் மற்றும் ரி-20 உலகக்கிண்ணத் தொடர் ஆகியவற்றில் பென் ஸ்டோக்ஸ் பங்கேற்கவில்லை.

தற்போது ஆஷ் தொடரில் பங்கேற்கத் தயாராகஉள்ளளேன்எனஅவர்தெரிவித்ததையடுத்து, ஆஸ் தொடரில் விளையாடும் இங்கிலாந்து அணியில் பென் ஸ்டோக்ஸ் சேர்க்கப்பட்டுள்ளார். சகலதுறை வீரரான பென் ஸ்டோக்ஸின் வருகை நிச்சயம் இங்கிலாந்து அணிக்குப் பலம் சேர்க்குமென்று இங்கிலாந்து கிரிக்கெட் ரசிகர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தி வருகின்றனர்.







## ஐ.பி.எல். தொடரில் இரண்டு புதிய அணிகள் ஏலத்தில் பெருந்தொகைக்கு வாங்கப்பட்டன

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் தற்போது 8 அணிகள் பங்கேற்று விளையாடிவருகின்றன. அடுத்த ஆண்டு நடைபெறும் 15 ஆவது ஐ.பி.எல். போட்டியில் கூடுதலாக 2 அணிகள் இடம்பெறுகின்றன.

மொத்தம் 10 அணிகள் அடுத்த சீசனில் விளையாடவுள்ள நிலையில், புதிய அணிகளை சேர்ப்பதற்கான ஏலத்துக்கு அழைப்பு விடப்பட்டிருந்தது.

டுபாயில் நேற்று நடைபெற்ற இந்த ஏலத்தில் அகமதாபாத், லக்னோ நகரங்களை மையமாகக் கொண்ட 2 புதிய அணிகள் சேர்க்கப்பட்டுள்ளன. இதில், இந்தியப் பணக்காரர் சஞ்சீவ் கோயங்காவின் ஆர்.பி.எஸ்.ஜி. குழுமம் லக்னோ அணியை இந்திய நாணய மதிப்பில் ரூபா 7,090 கோடிக்கு ஏலம் எடுத்துள்ளது. தனியார் முதலீட்டு நிறுவனமான சி.வி.சி. கப்பிட்டல்ஸ், அகமதாபாத் அணியை ரூபா.5,526 கோடிக்கு வாங்கி உள்ளது. இந்தத்தகவலை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.

அடுத்ததாக நடைபெறவிருக்கும் வீரர்களுக்கான பெரும் ஏலத்தில் இந்த புதிய அணிகளின் தாக்கம் அதிகமாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.







## ஜப்னா கிங்ஸ் அணியில் பிரபல சர்வதேச வீரர்கள்

லங்கா பிறீமியர் லீக் தொடரில் விளையாடும் ஜப்னா கிங்ஸ் அணி, நடப்பு ஆண்டுக்கான தொடரில் இரு முக்கிய வீரர்களை ஒப்பந்தம் செய்துள்ளது. தென்னாபிரிக்க கிரிக்கெட் வீரர் பப் டு பிளெஸிஸ் மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வஹாப் ரியாஸ் ஆகியோர் ஜப்னா கிங்ஸ் அணிக்கு விளையாடவுள்ளனரென்பதை இதனை ஜப்னா கிங்ஸ் அணியின் நிர்வாகம் உறுதி செய்துள்ளது.

இதில் டு பிளெஸிஸ், அண்மையில் நடைபெற்று முடிந்த ஐ.பி.எல். ரி-20 தொடரில் சம்பியன் பட்டம் வென்ற சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் இடம்பிடித்திருந்தார். அந்த அணி சம்பியன் பட்டத்தை வெல்வதற்கு மிக முக்கிய காரணமாக திகழ்ந்த டு பிளெஸிஸ், அந்தத் தொடரில் அதிக ஓட்டங்களை குவித்த இரண்டாவது வீரராக இடம்பிடித்திருந்தார். அத்துடன் இறுதிப் போட்டியில் ஆட்டநாயகனாகவும் தெரிவுசெய்யப்பட்டார்.

பாகிஸ்தான் வீரர் வஹாப் ரியாஸ், தற்போது நடைபெற்று வரும் ரி-20 உலகக்கிண்ண தொடரில், பாகிஸ்தான் அணியில் இடம்பெறாவிட்டாலும் அனுபவமிக்க பந்து வீச்சாளரான அவரது பங்களிப்பு ஜப்னா கிங்ஸ் அணிக்குப் பலம் சேர்க்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பாகிஸ்தான் பிறீமியர் லீக் தொடரில் வஹாப் ரியாஸ் தலைமையிலான பெசாவர் சல்மி அணியில் டு பிளெஸில் விளையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தல் குறித்து அமைச்சு செயலர்கள் மாதம் ஒருமுறை சந்திக்க வேண்டும்

## பிரதமர் மஹிந்த உத்தரவு



அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அவற்றை செயற்படுத்துவதில் காணப்படும் சிக்கல்கள் மற்றும் எதிர்பார்க்கும் திட்டங்களுடன் அமைச்சரவை அமைச்சின் செயலாளருடன் இராஜாங்க அமைச்சின் செயலாளர்கள் மாதத்திற்கு ஒருமுறை சந்தித்து கலந்துரையாடுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதற்கமைய மேற்படி சந்திப்பின் போது கலந்துரையாடும் விடயங்களை காலாண்டுக்கு ஒருமுறை மீளாய்வு செய்து அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான செயற்திறன் மிக்க வேலைத் திட்டத்தை முன்னெடுத்து செல்லுமாறு பிரதமர் வலியுறுத்தினார்.

தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளிநாட்டு நிதி உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் நான்கு திட்டங்கள் மற்றும் கரையோரப் பாதுகாப்பு மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் மூன்று அரச நிறுவனங்களின் இரண்டாவது காலாண்டின் திட்ட முன்னேற்றத்தை ஆய்வு செய்யும் கூட்டம் அலரி மாளிகையில் இடம்பெற்ற போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

2021ஆம் ஆண்டுக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சிற்கு 55 ஆயிரத்து 452 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் சிறிநிமல் பெரேரா சுட்டிக்காட்டினார். பிரதமரின் ஆலோசனைக்கமைய மேற்படி நிதியை இந்த வருட இறுதிக்குள் திட்டங்களுக்காகச் செலவிடுவதற்கு எதிர்பார்க்கிறோம் எனவும் தெரிவித்தார்.

இதன்போது சில திட்டங்களை செயற்படுத்தும் போது அத்தியாவசிய ஆள் சேர்ப்பு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக அதிகாரிகள் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர்.

ஊதியம் வழங்குவதற்கு அந்தந்த நிறுவனங்களுக்கு வருமானம் இருப்பின் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு தடை விதிக்கப்படவில்லை. தேவையான நபர்களை வேலைக்கு அமர்த்துங்கள் என பிரதமர் குறிப்பிட்டார்.

பாணந்துறை நகரம் நீரில் மூழ்குவதைக் கட்டுப்படுத்துவதற்கு எவ்விதத் திட்டமும் இதுவரை முன்னெடுக்கப்படாமை தொடர்பாக பிரதமர் இதன்போது அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பினார்.

எதிர்காலத்தில் பாணந்துறை நகரம் நீரில் மூழ்காதிருப்பதற்குத் திட்டமொன்றை வகுத்து துரித கதியில் செயற்படுத்துமாறு பிரதமர் இதன்போது ஆலோசனை வழங்கினார்.

நீர்ப்பாசன சுபீட்ச திட்டத்தின் கீழ் ஆறு மாவட்டங்களில் 65 குளங்களை அடையாளம் கண்டு முன்னெடுக்கப்படும் புனரமைப்பு நடவடிக்கைகள் தொடர்பில் இதன்போது பிரதமரின் கவனம் செலுத்தப்பட்டது.

குறித்த 23 குளங்களின் புனரமைப்பு நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன என அதிகாரிகள் இதன்போது குறிப்பிட்டனர். இவ்வாறு புனரமைக்கப்படும் குளங்களின் பெயர்ப் பட்டியல் மற்றும் மேற்படி குளங்கள் எந்த அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன என்பன தொடர்பான அறிக்கையை தனக்கு வழங்குமாறு பிரதமர் தெரிவித்தார்.

பணியாளர்களை ஆள்சேர்ப்பு செய்வதில் நிர்வாக சேவைகள் திணைக்களத்தின் உடனடி கவனத்தை ஈர்ப்பதற்கும் இதன்போது முன்மொழியப்பட்டது.

கப்பல்களின் மூலம் ஏற்படுத்தப்படும் கடல்சார் சூழல் பாதிப்பைத் தடுப்பதற்கு 65 சதவீத முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் தர்னி லஹந்தபுர குறிப்பிட்டார்.

எம்.வீ.எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பலால் இலங்கையின் கடல்சார் சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பு தொடர்பில் இதன்போது பிரதமரின் கவனம் செலுத்தப்பட்டது. மேற்படி கப்பல் விபத்தினால் ஏற்பட்ட சேதம் தொடர்பான குற்றப்பத்திரிக்கை சட்ட மா அதிபர் திணைக்களத்தின் உதவியுடன் விரைவில் சமர்ப்பிக்கப்படும் என்று லஹந்தபுர அவர்கள் தெரிவித்தார்.

மேற்படி கப்பல் விபத்தால் ஏற்பட்ட சுற்றுச்சூழல் பாதிப்புகளை மதிப்பிட்டு இழப்பீடு பெறுவதற்கு லண்டன் சீபாஸ் நிறுவனத்துக்கு தண்ணீர் மற்றும் பிளாஸ்டிக் மாதிரிகளையும், பிரான்ஸின் செட்ரி நிறுவனத்துக்கு உயிரியல் மாதிரிகளும் அனுப்பப்பட்டுள்ளன என இதன்போது குறிப்பிடப்பட்டது.

இது தொடர்பில் இரு பேராசிரியர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட 40 பேரை கொண்ட நிபுணர் குழுவின் அடிப்படை நிபுணர் குழு அறிக்கையை எதிர்வரும் நவம்பர் 30 ஆம் திகதி சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளோம் என லஹந்தபுர குறிப்பிட்டார்.

முன்னேற்ற மதிப்பாய்வின் நிறைவில், எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நிதி அறிக்கை படிவத்தை அந்தந்த நிறுவனங்களின் தலைவர்களிடம் பிரதமர் கையளித்தார்.

# இலங்கை அகதி ஒருவர் விபத்தில் பரிதாபச் சாவு

மதுரை - மேலூரை அடுத்துள்ள கொட்டாம்பட்டி நாகமங்கலம் நான்குவழிச் சாலையில் இடம்பெற்ற விபத்தில் இலங்கை அகதி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தமிழக ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

திருவண்ணாமலை மாவட்டம், கலசபாக்கம் அருகே தென்பள்ளிப்பட்டு கிராமத்தில் அகதிகள் முகாமைச் சேர்ந்த 21 வயதான டெலக்சன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வேலை நிமித்தம் தனது நண்பருடன் மதுரைக்குச் சென்று வரும் போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. வேலை முடிந்தது, மீளவும் திருவண்ணாமலை அகதிகள் முகாமிற்கு திரும்பிய போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

குறித்த இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்ற போது மதுரை மாவட்டம், மேலூரை அடுத்துள்ள கொட்டாம்பட்டி நாகமங்கலம் நான்குவழிச் சாலையில் சென்று கொண்டிருக்கும் போது பின்னால் வந்த அடையாளம் தெரியாத வாகனம் மோட்டார் சைக்கிள் மீது மோதியது.

இதில் டெலக்சன் பரிதாபமாக உயிரிழந்தார். அவரது நண்பர் காயத்துடன் உயிர் தப்பினார். சம்பவம் தொடர்பில் கொட்டாம்பட்டி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மத்தியவங்கி பிணைமுறி மோசடியை மூடி மறைக்கின்றது அரசாங்கம்

## சுனில் ஹந்துன்நெத்தி குற்றச்சாட்டு

உள்ளி, சீனி,தேங்காய் எண்ணெய் ஆகிய பொருள்களுடனான மோசடியை முன்னிலைப்படுத்தி அரசாங்கம் மத்திய வங்கி பிணைமுறி மோசடியை மூடி மறைக்கிறது என மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

ஆட்சிக்கு வந்து மூன்று மாத காலத்துக்குள் பிணைமுறி மோசடியாளர்களைத் தண்டிப்பதாக குறிப்பிட்ட அரசாங்கம் இரண்டாண்டுகள் கடந்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என அக்கட்சியின் உறுப்பினர் சுனில் ஹந்துநெத்தி தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அரசாங்கத்தின் தவறான தீர்மானத்தால் விவசாயிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளார்கள் என்றும் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட திரவ உர இறக்குமதியில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குறித்த இறக்குமதிக்கான நிதி மத்திய வங்கியின் திறைசேரி ஊடாக வழங்கப்பட வேண்டும் ஆனால் நிதி ஒரு தனியார் வங்கி வைப்பின் ஊடாக செலுத்தப்பட்டுள்ளது என்றும் சுனில் ஹந்துநெத்தி குறிப்பிட்டார்.

# இன, மத அடிப்படையில் பெயருடைய கட்சிகளை இடைநிறுத்தல் வேண்டும்

## விமல் கட்சி பரிந்துரை

இன மற்றும் மத அடிப்படையிலான பெயர்களைக் கொண்ட கட்சிகளின் பதிவுகளை இடைநிறுத்த வேண்டும் என விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன தலைமையில் நாடாளுமன்ற விசேட குழு கூடியபோதே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர இதனைத் தெரிவித்தார்.

மேலும் புதிய அரசமைப்பின் ஊடாக உள்ளூராட்சி மன்றத்துக்குத் தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சி மன்ற பிரதானிகளின் மாகாண சபையை மாகாண அபிவிருத்தி சபையாக மாற்ற வேண்டும் என்றும் அவர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

அவ்வாறு மாற்றப்படும் அந்த சபைகளுக்கு மக்கள் இறையாண்மையுடன் தொடர்புடைய அதிகாரங்களை மாத்திரம் வழங்க வேண்டும் என்றும் தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

அத்தோடு அதன் மூலம் மாகாண சபைத் தேர்தலை ரத்துச் செய்ய வேண்டும் எனவும் தேசிய சுதந்திர முன்னணி நாடாளுமன்ற விசேட குழுவில் சுட்டிக்காட்டியுள்ளது.

தேசியப் பட்டியலின் மூலம் நியமிக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை மொத்த உறுப்பினர்களில் 5 சதவீதமாகக் குறைக்கப்பட வேண்டும் என்றும் தேசிய சுதந்திர முன்னணி பரிந்துரைத்துள்ளது.

# இரசாயன உரத்துக்கான தடையில் திருத்தமில்லை

## இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ அறிவிப்பு

அரசாங்கத்தின் மீது எவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைத்தாலும் இரசாயன உரப் பாவனையைத் தடை செய்யும் தீர்மானத்தில் திருத்தம் செய்யப்பட மாட்டாது என இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சேதன பயிர்செய்கையை பயன்படுத்துவதற்கான முடிவு மக்களின் நல்வாழ்வுக்காக எடுக்கப்பட்டது என்றும் அது தேர்தல் வாக்குறுதி அல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பதுளையில் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர், எவரும் விரும்பாத தீர்மானத்தை ஜனாதிபதி எடுத்துள்ளார் எனவும், சுயநலமாக இந்தத் தீர்மானம் எட்டப்படவில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் எவ்வாறான குறைபாடுகள் இருந்தாலும் ராஜபக்ஷ அரசாங்கம் தொடர்ந்தும் முன்னோக்கிச் செல்லும் என்றும் சசீந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

அத்தோடு அறுவடை குறைவாக இருந்தால், ஒரு பொறுப்புள்ள அரசாங்கமாக, விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 26.10.2021இல் வெளியிடப்பெற்றது.